©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 270] CHENNAI, MONDAY, SEPTEMBER 6, 2010
Aavani 21, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், தஞ்சாவூர்.**

**தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், தேப்பெருமாநல்லூர் கிராம ஊராட்சித் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க. எண் 6556/2009/அ3]*

**No. VI(2)/420(a)/2010.**

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், தேப்பெருமாநல்லூர் ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி எஸ். கீதா என்பவர் அவ்வூராட்சியின் நிர்வாக அலுவலர் என்ற முறையில் செயல்படும்போது ஊராட்சி நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டதனையடுத்து 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205–ன்கீழ் அன்னாருக்கு விளக்கம் கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டு, அதற்கு அன்னார் தனது விளக்கத்தினை அளித்திருந்தார். ஊராட்சி மன்றத்தலைவர் மீதான குற்றச்சாட்டுகள், அவற்றிற்கு அவர் அளித்துள்ள விளக்கங்கள் ஆகியன விதிமுறைகளுடன் ஆய்வு செய்யப்பட்டு விளக்கங்கள் ஏற்கக்கூடியதாக இல்லை. எனவே, 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 205(2)–ன்படி அன்னாரை ஊராட்சி மன்றத்தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டு, இதுகுறித்து அந்தக் கிராம ஊராட்சியின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக தேப்பெருமாநல்லூர் கிராம ஊராட்சி உறுப்பினர்களின் கூட்டத்தினை அவ்வூராட்சி மன்ற அலுவலகத்தில் நடத்திட திருவிடைமருதூர் வட்டாட்சியருக்கு உத்தரவிடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து திருவிடைமருதூர் வட்டாட்சியர் தேப்பெருமாநல்லூர் ஊராட்சியின் கூட்டத்தினை 27–05–2010 அன்று நடத்தி ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கருத்துகள் கேட்கப்பட்டதில் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து உறுப்பினர்களும் ஊராட்சி மன்றத்தலைவர் அளித்துள்ள விளக்கங்களை ஏற்றுக்கொள்வதாகவும், ஊராட்சி மன்றத்தலைவரை பதவி நீக்கம் செய்யும் ஊராட்சிகளின் ஆய்வாளரின் யோசனையை நிராகரித்தும் கருத்து தெரிவித்திருந்தனர்.

19–08–2009 தேதிய சென்னை உயர்நீதிமன்ற முழு நடுவர் ஆயத்தின் தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையின்படி, தேப்பெருமாநல்லூர் ஊராட்சி மன்றத்தின் கருத்துகளுக்கு மாறாக, ஊராட்சி மன்றத்தலைவரை பதவி நீக்கம் செய்ய வேண்டிய அவசியத்தின் காரணங்களைத் தெரிவித்து மறுவிளக்கம் கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டு அன்னார் தனது மறுவிளக்கத்தினை சமர்ப்பித்திருந்தார்.

அன்னார்மீது பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அதற்கான ஊராட்சி மன்றத்தலைவரின் விளக்கங்கள், திருவிடைமருதூர் வட்டாட்சியரால் நடத்தப்பட்ட சிறப்புக் கூட்டத்தில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளரின் முடிவு ஊராட்சி மன்றத்தின் கருத்திற்கு மாறுபட்ட நிலையில் அதற்கு ஊராட்சி மன்றத்தலைவரின் மறுவிளக்கம் ஆகியவை உளத்தேர்வின்படி கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தேப்பெருமாநல்லூர் ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி எஸ். கீதா என்பவரை அவ்வூராட்சி மன்றத்தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 262(1)—ன்படியும் சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அரசு முதன்மைச் செயலர் அவர்களின் கடித ந.க. எண் 3205/ப.ரா.4/2010—1, நாள்: 01—03—2010 தேதிய அறிவுரைகளின்படியும் ***தமிழ்நாடு அரசிதழில்*** சிறப்பு வெளியீடாக வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

தஞ்சாவூர்,
2010 செப்டம்பர் 2.

**ம.சு. சண்முகம்,**
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.